# இராசிபுரம் நகராட்சி

**நகராட்சிப் பொறியாளர் மற்றும் ஆணையாளர் (கூ.பொ.) அவர்களின் தலைமையில் 05.10.2020 அன்று முற்பகல் 11.00 மணிக்கு இராசிபுரம் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்ட நடவடிக்கைகள்**

⏩⏩⏩

இராசிபுரம் நகராட்சியில் ரூ. 55.42 கோடியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் மற்றும் ரூ. 15.60 கோடியில் முடிவுற்ற குடிநீர் மேம்பாட்டுத் திட்டப் பணிகளால் சாலைகள் சேதமடைந்து பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளது. அதன்படி, சாலைகள் மேம்பாட்டு செய்தல் தொடர்பாக இராசிபுரம் நகராட்சி அலுவலகத்தில் நகராட்சிப் பொறியாளர் மற்றும் ஆணையாளர் (கூ.பொ.) அவர்களின் தலைமை மற்றும் நகரின் முக்கிய பிரதிநிதிகள் முன்னிலையில் 05.10.2020 அன்று முற்பகல் 11.00 மணிக்கு கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கலந்தாய்வுக் கூட்டத்தில் கீழ்காணும் அலுவலர்கள் மற்றும் நகராட்சிப் பகுதியிலுள்ள முக்கிய பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

1) நகராட்சிப் பொறியாளர், இராசிபுரம் நகராட்சி
2) துப்புரவு அலுவலர், இராசிபுரம் நகராட்சி
3) மேலாளார், இராசிபுரம் நகராட்சி
4) துப்புரவு ஆய்வர்கள், இராசிபுரம் நகராட்சி
5) நகரமைப்பு ஆய்வாளர், மற்றும் இளநிலைப் பொறியாளர்(பொ), இராசிபுரம் நகராட்சி
6) வருவாய் ஆய்வர், இராசிபுரம் நகராட்சி
7) பொருத்துநர், இராசிபுரம் நகராட்சி
8) பணி ஆய்வர், இராசிபுரம் நகராட்சி

திருவாளர்கள் :

9) இரா. சிவகுமார், தலைவர், அரிமா சங்கம், குஞ்சுமாரியம்மன் கோவில் தெரு
10) பெ. சீனிவாசன், முன்னாள் நகர் மன்ற உறுப்பினர், 8 ஆவது வார்டு
11) ஆர். ஸ்ரீரங்கன், முன்னாள் நகர் மன்ற உறுப்பினர், 18 ஆவது வார்டு
12) ஆ. பிரகாஷ், கட்டட வரைவாளர், வி. நகர் சாலை எண் 1
13) என். செல்லப்பன், ஒப்பந்ததாரர், வி. நகர் சாலை எண் 17
14) ஆர். எஸ். ரங்கசாமி, ரோட்டரி சங்க முன்னாள் தலைவர், காட்டூர்

Scanned with Cam

15) ம. சலீம், தனியார் பணியாளர், சிவன் கோவில் தெரு

16) பி. கே. ஹரிகரன், கட்டட வரைவாளர், வி. நகர் சாலை எண் 14

17) கோ. இராகவன், அம்மன் நற்பணி மன்றம், அண்ணா சாலை

18) எஸ். குபேர்தாஸ், கோல்டன் நற்பணி மன்றம், பாரதிதாசன் சாலை

19) கே. காளியப்பன், இரத்ததான கொடையாளர், பூக்கடைவீதி

20) எல். ஓபுளிசாமி, ஜவுளி வியாபபரம், நஞ்சப்பா சந்து

21) ஆர். கண்ணன், எலக்ட்ரானிக்ஸ் பணியாளர், வரதன் தெரு

## கலந்தாய்வுக் கூட்ட நடவடிக்கைகள்

1) நகராட்சியில் த. கு. வ. வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் மற்றும் முடிவுற்ற குடிநீர் மேம்பாட்டுத் திட்டப் பணிகளால் சாலைகள் சேதமடைந்து பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளதாக பொதுமக்களால் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

2) நகர பகுதிக்குள் மிகவும் குறுகலாக உள்ள தார் சாலைகளான சிவன் கோவில் சந்து, அங்காளம்மன் கோவில் தெரு மற்றும் செக்கடி தெரு போன்ற பகுதிகளை சிமென்ட் கான்க்ரீட் சாலைகளாக மாற்றியமைக்க பொதுமக்களால் கேட்டுக் கொள்ளப்பட்டது.

3) சேதமடைந்துள்ள சாலைகளின் பக்கவாட்டு சுவர்களை சாலையின் உயரத்திற்கு இணையாக உயர்த்தியமைத்து புதுப்பித்து வழங்குமாறும் கோரிக்கை வைக்கப்பட்டது,

4) வடிகால்கள் சேதமடைந்துள்ளதை புதுப்பித்து வழங்குமாறு, குறிப்பாக வி. நகர் சாலை எண் 2 மற்றும் 3, மேற்கு காலனி, குமாசைாமி தெரு, ஏஞ்சல்'ஸ் காலனி, வைத்தியலிங்கம் தெரு, எல்லப்பா காலனி, இராமசாமி தெரு எண் 1, 2, 3 மற்றும் 4 பகுதிகளில் வடிகால்களை புதுப்பித்து வழங்குமாறு பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டன.

5) போக்குவரத்திற்கு ஏற்றவாறு சேதமடைந்த சாலைகளை உடன் சீரமைத்து வழங்குமாறும், நகராட்சியின் நிதி நிலைமையினைக் கருதி அரசிடம் மான்யத் திட்டத்தின் கீழ் நிதியினைக் கோரிப் பெற்று சாலைப் பணிகளை மேற்க்கொள்ளுமாறும் பொதுமக்களால் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

அதன்படி, கீழ்காணும் சாலைகளை புதுப்பித்து வடிகால்களை மேம்படுத்த தீர்மானிக்கப்பட்டது,

Scanned with Cam

| வ. எண். | சாலையின் பெயர் | அமைக்கப்படவுள்ள சாலை விவரம் |
|---|---|---|
| 1) | **தொகுப்பு – 1 (Package No.1)** | |
| | 1) மேற்கு காலனி | தார் சாலை |
| | 2) குமாரசாமி தெரு | தார் சாலை |
| | 3) குமாரசாமி தெரு சந்து | கான்கிரீட் சாலை |
| | 4) சிவன் கோவில் சந்து | கான்கிரீட் சாலை |
| | 5) சிவன் கோவில் தெரு | தார் சாலை |
| | 6) மின்வாரிய காலனி சாலை | தார் சாலை |
| | 7) இந்திரா காலனி சாலை | தார் சாலை |
| 2) | **தொகுப்பு – 2 (Package No. 2)** | |
| | 1) சுவாமி சிவானந்தா சாலை ஏஞ்சல்ஸ் காலனி (வித்யா நிகேதன் பள்ளி மேற்கு) | தார் சாலை |
| | 2) சிங்கான் சந்து & வாலப்பா தெரு | தார் சாலை |
| | 3) MSP சுப்பராயன் தெரு, ERA இராமலிங்கம் தெரு, அனுமந்த தெரு | தார் சாலை |
| | 4) முத்துசாமி தெரு | கான்கிரீட் சாலை |
| | 5) அன்னமார் தெரு | கான்கிரீட் சாலை |
| | 6) சந்துவீரி தெரு | கான்கிரீட் சாலை |
| 3) | **தொகுப்பு – 3 (Package No. 3)** | |
| | 1) வள்ளலார் சாலை | தார் சாலை |
| | 2) சுப்ரமணியம் நகர் & கேசவன் லே அவுட் | தார் சாலை |
| | 3) வைத்தியலிங்கம் தெரு | தார் சாலை |
| | 4) இராமசாமி தெரு எண்.1, 2, 3 & 4 | தார் சாலை |
| | 5) காமாட்சியம்மன் கோவில் தெரு | கான்கிரீட் சாலை |
| | 6) அமைச்சர் கோவிந்தசாமி தெரு | கான்கிரீட் சாலை |
| 4) | **தொகுப்பு – 4 (Package No. 4)** | |
| | 1) வீட்டு வசதி வாரிய சாலை | தார் சாலை |
| | 2) நெசவாளர் காலனி | தார் சாலை |
| | 3) எல்லப்பா காலனி | தார் சாலை |
| | 4) கோனேரிபட்டி எக்ஸ்டன்சன் 2 | தார் சாலை |
| | 5) மேட்டுக்காடு சாலை | தார் சாலை |
| | 6) காமராஜ் காலனி (கோனேரிப்பட்டி) | தார் சாலை |
| | 7) கோனேரிப்பட்டி எக்ஸ்டன்சன் 1 | கான்கிரீட் சாலை |
| 5) | **தொகுப்பு – 5 (Package No. 5)** | |
| | 1) மாரப்பன் தோட்டம் EB அலுவலக சாலை | தார் சாலை |
| | 2) வி. நகர் சாலை எண். 2 & 3 | தார் சாலை |
| | 3) வி. நகர் சாலை எண். 9 | தார் சாலை |
| | 4) வி. நகர் சாலை எண். 10 | தார் சாலை |
| | 5) சுப்பராய தெரு | கான்கிரீட் சாலை |
| | 6) நஞ்சப்பா தெரு | கான்கிரீட் சாலை |
| | 7) அங்காளம்மன் கோவில் தெரு | கான்கிரீட் சாலை |
| | 8) செக்கடி தெரு | கான்கிரீட் சாலை |

Scanned with Cam

| | | |
|---|---|---|
| 6) | தொகுப்பு – 6 (Package No. 6) | |
| | 1) தட்டான்குட்டை சாலை | தார் சாலை |
| | 2) காமராஜர் நகர் (வார்டு 8) | தார் சாலை |
| | 3) அங்காளம்மன் கோவில் காட்டூர் சாலை | தார் சாலை |
| | 4) மல்லித் தெரு | கான்கிரீட் சாலை |

1) நகராட்சிப் பொறியாளர் அவர்களால் தற்போதைய சாலைகளின் நிலை பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. அதன்படி, நகராட்சியிலுள்ள மொத்த சாலைகள் 68.796 கி. மீ. சாலைகளில் 56.21 கி. மீ. சாலைகள் சேதமடைந்துள்ளதாகவும், அதில் 25.588 கி. மீ. சாலைப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் மீதமுள்ள சாலைகளில் 13.745 கி. மீ. நீளமுள்ள சாலைகளை தார்சாலைகள் மற்றும் கான்க்ரீட் சாலைகளாகவும், மழைநீர் வடிகால்களை புதுப்பித்து புனரமைக்கவும் மற்றும் தேவையான இடங்களில் சிறு பாலங்கள் அமைத்து சாலைப் பணிகளை மேற்க்கொள்ளலாம் என எடுத்துரைத்தார்.

2) கலந்தாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்ட முன்னாள் நகர் மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் விதமாகவும் எந்தவிதமான ஆக்கிரமிப்புகளும் ஏற்படா வண்ணம் விழிப்புடன் இருக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

3) சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால்கள் அமைக்கும் பகுதிகளில் எந்தவிதமான ஆக்கிரமிப்புகளும் இல்லை. மேலும், புதுதாக நில எடுப்பும் தேவையில்லை.

4) தற்போது புதுப்பிக்கவுள்ள 13.745 கி. மீ. நீளமுள்ள சாலைகள் அனைத்தும் நகராட்சிக்கு சொந்தமான சாலைகளேயாகும். எனவே, பிற துறைகளிடம் அனுமதி பெறுதல் மற்றும் காலதாமதம் போன்றவற்றிற்கு இடமேதுமில்லை.

5) இத்திட்டப் பணிகளில் ஏற்கனவே உள்ள சேதமடைந்துள்ள வடிகால்கள் புனரமைக்கப்பட உள்ளன. நகராட்சிப் பகுதிகளில் ஆறு எதுவும் குறுக்கே செல்லவில்லை. எனவே, இயற்கை வளங்களை சேதப்படுத்தும் நிலை இல்லை. மேலும், வடிகால்களுக்கு உரிய சேருமிடம் உள்ளது.

அதன்படி, 13.745 கி. மீ. நீளமுள்ள சாலைகளை தார்சாலைகள் மற்றும் கான்க்ரீட் சாலைகளாகவும், மழைநீர் வடிகால்களை புதுப்பித்து புனரமைக்கவும் மற்றும் தேவையான இடங்களில் சிறு பாலங்கள் அமைத்து சாலைப் பணிகளை மேற்க்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

ஆணையாளர் (கூ.பொ.)
இராசிபுரம் நகராட்சி.

நகல் பணிந்தனுப்பப்படுகிறது :

1) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 28.
2) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் – 9

Scanned with Cam